

கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் அவர்களின் தாயாரும், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொதுவுடமை போராளி ஏ.கே.சுப்பையா அவர்களின் மனைவியுமான சுப்பம்மாள் அம்மையார் அவர்களின் இறுதி அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்வில், கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் பங்கேற்று அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தி அவரது திருவுருவப் படத்தினை திறந்து வைத்தனர்.

### கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயனின் தாயார்

# ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அம்மையார் இறுதி அஞ்சலி நிகழ்வு!

## கே.என்.நேரு-எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்-பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், ஜூலை 26 –

கழக விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் முன்னாள் சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னருமான ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் தாயாரும், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொதுவுடமை போராளி ஏ.கே.சுப்பையா அவர்களின் மனை வியுமான சுப்பம்மாள் அம்மையார் அவர்களின் இறுதி அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்வில்,கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,முன்னாள் அமைச்சர் கோவி.செழியன்,மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் பங்கேற்று அம்மையாருக்கு அஞ்சலி செலுத்தி அவரது திருவுருவப் படத்தினை திறந்து வைத்தனர்.

ஏ.கே.எஸ்.சுப்பம்மாள் அம்மையார் (102) வயது முதிர்வு காரணமாக காலமானதையொட்டி . அம்மையாரின் இறுதி அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்வு அவரது சொந்த ஊரான சித்தமல்லியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்,முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் , மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,ஆகியோருடன்

முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தலையாமங்கலாம் ஜி. பாலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருவிடைமருதூர் ராமலிங்கம், வை.செல்வராஜ் எம். பி., சட்டமன்ற உறுப்பினர்கள் துரை . சந்திரசேகர் , நிவேதா முருகன், செந்தில் செல்வன்,அண்ணாதுரை, எஸ்.காமராஜ், மாரிமுத்து.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரத்தநாடு பி.ராஜமாணிக்கம்,அ.அசோகன், மகேஷ் கிருஷ்ணசாமி, ப.ஆடலரசன்,நீலமேகம், அருட்செல்வம் ,கிருஷ்ணசாமி, கோ. பழனிசாமி, கே.உலகநாதன்,

மேயர் அஞ்சுகம் பூபதி, நகர் மன்ற தலைவர்கள் மன்னை த. சோழராஜன், கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, மும்தாஜ் நவாஸ் கான்,வேளாங்கண்ணி எடிசன் , முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன்,தாழை. மு.அறிவழகன், மீனவர் அணி செயலாளர் மனோகரன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா.சங்கர், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் அழகுதிருராஜா. மாவட்ட செயலாளர் செல்லபாண்டியன், திருச்சி அன்பழகன் ,மாநில ஆதிதிராவிடர் நலக்குழு கிருஷ்ண சாமி, முன்னாள் இளைஞரணி செயலாளர் இல.மேகநாதன் , பாஜக மாநில நிர்வாகி கருப்பு முருகானந்தம் ,சிபிஎம் நிர்வாகிகள் ஐ.வி.நாகராஜன்,முருகையன்

மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், ராமகிருஷ்ணன் , சாந்தி பாஸ்கர் ,மு. வெங்கடேசன்,ஒன்றிய செயலாளர்கள் வீ. அன்பரசன், எஸ்.ஜோதிரமன் , ஆர்.பாலச்சந்தர், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பால. ஞானவேல், சேகர் கலியபெருமாள், புலிவலம்.ஏ.தேவா,கோ.தெட்சிணாமூர்த்தி , வே.மனோகரன்,ப.பிரபாகரன்,ப.பிரகாஷ்,இரா.மனோகரன்,டி. எஸ்.டி.முத்துவேல்,ஐ.வி.குமரேசன் ,சித்தேரி சிவா, ந.கவியரசு, கேவிகே.ஆனந்த். நகர செயலாளர்கள் ஆர்.எஸ். பாண்டியன், வீரா. கணேசன், வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பா.சிவநேசன், ஏ.கே.டி.சேரன், நன்னிலம் பக்கிரி சாமி, பேரூர் செயலாளர்கள் பேரளம் தியாகு , பூண்டி.கே.கலைவேந்தன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள்,சார்பு அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் ,அனைத்துக் கட்சி நிர்வாகி கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் ‘‘தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (வேலூர்) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின்’’ (பதிவு எண் 820/NAT, பேரவை இணைப்பு எண். 405) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்திட பேரவைச் செயலாளர் திரு. **சோம.அழகிரி** அவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டு ஏற்கெனவே பேரவையால் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி தேர்தல் ஆணையாளரால் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணை, விதிமுறைகளின்படி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

**தேர்தல் கால அட்டவணை**

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்**

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 10.08.2026 காலை 11.30 மணி

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்)–14.08.2026 காலை 11.00 மணி

வேட்பு மனு படிவம் வழங்குதல் –16.08.2026 காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

வேட்பு மனு தாக்கல்–17.08.2026 காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை

வேட்புமனு பரிசீலனை–17.08.2026 மதியம் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–17.08.2026 மாலை 6.00 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–18.08.2026 காலை 12.00 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–18.08.2026 மாலை 4.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு (பணிமனைகள்தோறும்) – 23.08.2026 காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்**

வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் –24.08.2026 காலை 9.00 மணி

(பணிமனைகளில் வெற்றி பெற்றவர்கள்)வேட்பு மனு படிவம் வழங்குதல் –24.08.2026 காலை 9.30 மணி

வேட்பு மனுத்தாக்கல்–24.08.2026 காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வேட்பு மனு பரிசீலனை –24.08.2026 மதியம் 2.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை

தகுதியுள்ள வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–24.08.2026 மாலை 3.30 மணி

வேட்பு மனு திரும்பப் பெறுதல்–24.08.2026 மாலை 4.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல்–24.08.2026 மாலை 5.00 மணி

போட்டியிருப்பின் வாக்குப் பதிவு–25.08.2026 காலை 9.00 மணி முதல் காலை 11.00 மணி வரை

வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:–**

1) பணிமனை தேர்தலுக்கு உரிய வேட்பு மனு படிவம் வழங்குதல், வேட்பு மனு தாக்கல், மனு பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் அறிவித்தல் அந்தந்த பணிமனைகளில் ஒதுக்கப்படும் இடத்தில் நடைபெறும்.

2) மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அனைத்து நடைமுறைகளும் வேலூர் மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

24.07.2026 — **மு.சண்முகம்**, Ex.MP

இடம் : கலைஞரகம் — பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை

# மக்கள் பயன்பாட்டிற்குத் தேவையான அரியலூர் - பெரம்பலூர் - நாமக்கல் ரயில் சேவை!

## அருண் நேரு எம்.பி. கோரிக்கையை ரயில்வே துறை ஏற்றது!



திருச்சி, ஜூலை 26 -

பெரம்பலூர் மாவட்ட மக்கள் ரயில் போக்குவரத்து வசதியை அன்றாடம் பயன்படுத்த அரியலூர் அல்லது திருச்சிக்கு செல்ல வேண்டும் . மாவட்ட மக்களுக்கு ரயில் போக்குவரத்து வசதி என்பது கனவாகவே இதுவரை இருந்து வந்தது. பலமுறை பலர் முயற்சி செய்தும் பலன் இல்லை.

இந்நிலையில் பார்லிமெண்டில் பெரம்பலூர் எம்பி அருண் நேரு எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து பேசிய ரயில்வே அமைச்சர் அரியலூரில் இருந்து பெரம்பலூர் வழியாக நாமக்கல் வரை புதிய ரயில் பாதை அமைப்பது குறித்த விரிவான செயல் திட்ட அறிக்கையை தயாரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயல் திட்டம் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு நிதி ஆயோ மத்திய நிதியமைச்சகம் மதிப்பீட்டு ஒப்புதலுக்குப் பிறகு முறையான அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இது குறித்து பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு கூறும் போது, பெரம்பலூர் எம்.பி. ஆக பொறுப்பேற்றது முதல் பார்லிமெண்டில் ரயில்வே பட்ஜெட் மீதான வெட்டு தீர்மானத்திலும் ரயில்வே அமைச்சர் உடன் தனிப்பட்ட சந்திப்புகளிலும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு நேரடி ரயில் இணைப்பு கோரி மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து ரயில்வே அமைச்சகத்திடம் அழுத்தமான முறையில் வலியுறுத்தி வந்தேன். அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் பார்லிமெண்டில் நான் எழுப்பிய கேள்விக்கு மத்திய ரயில்வே துறை தற்போது அதிகாரப்பூர்வமாக பதில் அளித்துள்ளது.

அரியலூர் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் பெரம்பலூருக்கு நேரடி தரைவழி போக்குவரத்து தேவையை மத்திய அரசு ஆவணப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது. அதோடு 116 கிலோ மீட்டர் நீள நாமக்கல் - பெரம்பலூர் - அரியலூர் புதிய ரயில் பாதை திட்டத்திற் கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க முழு ஒப்புதலையும் வழங்கி உள்ளது.

இந்த ரயில் பாதை திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது மக்களுக்கு எளிதான மற்றும் வேகமான பயணம், உள்ளூர் தொழில்கள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கு ஊக்கமளிக்கும் உள்ளூர் பொருட்களுக்கான வலுவான விவசாய சந்தை அமையும். தொகுதியின் பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பெருகும். இந்த கனவு திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வேன் என்று கூறினார்.

### தாராபுரம் பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம் கட்டிட

# நிதி விடுவிக்க தாமதப்படுத்தும் த.வெ.க. அரசு!

## திறப்பு விழா எப்போது? எதிர்பார்ப்பில் பயணிகள்!

திருப்பூர், ஜூலை 26 –

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகரின் மையப்பகுதியில் தற்போது இயங்கி வரும் நகராட்சி மத்திய பேருந்து நிலையம் கட்டப்பட்டு 30 ஆண்டுகளை கடந்து விட்டது. அன்றைய மக்கள் தொகைக்கு ஏற்ப அமைக்கப்பட்ட இந்த பேருந்து நிலையத்துக்கு தற்போது நாளொன்றுக்கு 92 தொலைதூரப் பேருந்துகள் வந்து செல்கின்றன. இதனால் பழனி. கொடைக்கானல், கோவை, திருப்பூர் செல்லும் பேருந்து பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது.

ஆனால், பேருந்து நிலையத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, வெளி மாவட்டங்களுக்கு செல்லும் தொலைதூரப் பேருந்துகள் பேருந்து நிலைய த்திற்கு வராமல் வெளியிலேயே பயணிகளை இறக்கிவிட்டு, ஏற்றிச்செல்லும் நிலை நீடித்து வருகிறது. சில நேரங்களில் கோவை, திருப்பூரில் இருந்து வரும் பேருந்துகள் தாராபுரம் மத்திய பேருந்து நிலையத்துக்கு வராமலே மேம்பாலம் வழியாக சென்று விடுகின்றன.

இதனால் பேருந்து நிலையத்தில் காத்திருக்கும் பயணிகள், வெளியூருக்கு செல்ல வேண்டிய மாணவ, மாணவிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதற்கு பேருந்து நிலையத்தில் இடப்பற்றாக் குறை மற்றும் அடிப்படை வசதியின்மையே காரணம் என புகார் எழுந்துள்ளது. பேருந்து நிலையத்தின் இடப்பற்றாக் குறையை நிரந்தரமாக போக்குவதற்கும், பஸ் பயணிகளுக்கு கழிப்பிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, தாய்மார்களுக்கு பாலூட்டும் அறை, புறக்காவல் நிலையம் உள்ளிட்டவை அமைக்கவும். நவீன முறையில் பேருந்து நிலையத்தை விரிவு படுத்த அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது இதையடுத்து கழகத் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த கால திராவிட மாடல் ஆட்சியில் ரூ.5.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கட்டுமான பணியை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தின் வட பகுதியில் உள்ள வணிகவளாக கடைகள் முற்றிலும் இடித்து அகற்றப்பட்டு புதிதாக 41 வணிக வளாக கடைகளுடன் பேருந்துகள் நின்று செல்வதற்கு வசதியாக ரேம்புகள் கட்டப்பட்டன. கட்டிடங்களுக்கு வர்ணம் பூசும் பணியும் நிறை வடைந்துள்ளது.

ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்துகளை நிறுத்தும் இடம் கட்டுவதற்கான நிதி விடுவிக்கப்படவில்லை. நிதியை விடுவிக்க தவெக அரசு காலதாமதம் செய்து வருவதாக நகராட்சி உறுப்பினர்களிடையே புகார் எழுந்தது. இதன் காரணமாக பொதுமக்களும், பள்ளி செல்லும் மாணவ, மாணவிகளும் போதிய இடவசதி இல்லாத பேருந்து நிலையத்தையே பயன்படுத்தி வருகின்றனர். இதனால், சமூக விரோதிகளால் பெண்களுக்கும். வணிக வளாக கடைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் விரும்பத்த காத பிரச்னைகள் ஏற்பட்டு வருகிறது.

புதிய கட்டிடத்தில் வணிக வளாக கடைகளை வியாபாரிகள் பலர் லட்சக்கணக்கான ரூபாய் முன்பணமாக செலுத்தி குத்த கைக்கு எடுத்துள்ளனர். ஆனால் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ய முடியாமல் உள்ளனர். கடன் பெற்றவர்களிடம் கடந்த ஆறு மாதமாக தேவையின்றி வட்டிகளை கட்டி வருவதாகவும், தங்களுக்கு பெரும் பொருள் இழப்பு ஏற்படுவதாகவும் புகார் தெரிவித்து வருகிறார்கள். பொதுமக்கள். பயணிகளின் தேவை மற்றும் பயன்பாட்டின் அவசியம் கருதி கட்டி முடிக்கப்பட்டு 6 மாதங்களை கடந்து விட்ட விரிவு படுத்தப்பட்ட பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாக கடைகளை திறக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

பேருந்து நிற்கும் இடங்களை புனரமைப்புச் செய்ய தேவையான நிதியை தவெக அரசு விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டு வருகிறது. அந்த பணிகளை முடித்து புதிய விரிவுபடுத்தப்பட்ட பேருந்து நிலைய கட்டிடத்தை திறப்பு விழா செய்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி எப்போது நடக்கும்? என்ற எதிர்பார்ப்பு சமூக ஆர்வலர்கள், பேருந்து பயணிகள், மாணவ, மாணவிகள் மத்தியில் எழுந்துள்ளது.



கோவை வடக்கு மாவட்டம், கூடலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் மக்கள் திட்டப்பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நகராட்சித் தலைவர் நகரக் கழகச் செயலாளர் அறிவரசு தலைமையில், பொறுப்பு ஆணையாளர் டி.டி.கோபிநாத், பொறியாளர் சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தாயார்

# மணியம்மாள் (எ) மணிமேகலை மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 26 -

கோவை தெற்கு மாவட்ச் செயலாளர் தளபதி முருகேசனின் தயார் மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்கள் (வயது 87) வயது முதிர்வின் காரணமாக 25.07.2026 அன்று அதிகாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, தாயை இழந்து வாடும் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### உடுமலை நாராயணன்
### ஜூலை 26 (1971)



கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கொங்கு நாட்டில் கழகத்தை கட்டி வளர்த்த சிறந்த செயல்வீரர். உடுமலை தேசிங்கு என்று நண்பர்களால் புகழ்ச்சியாக அழைக்கப்பட்ட முன்னணித் தோழரும் – கழகம் துவங்கிய காலம் முதல் கோவை மாவட்டக் கழக நிர்வாகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் கழகத் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் விளங்கியவர்.

“1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோவை மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்கிய பெருமைக்குரியவர்” என தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**